TNJR

முதல் இடைப் பருவ பொதுத்தேர்வு - 2019

நேரம் : 1.30 மணி பத்தாம் வகுப்பு Reg. No.

தமிழ்

மதிப்பெண் - 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 4 x 1 = 4

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பிடும் பயிர்வகை?
அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2. பாடு இமிழ் பனிக்கடல் பருகி - என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி
அ) கடல்நீர் ஆவியாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சியாதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

3. கூற்று-1 கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல் எனப்படுகிறது
கூற்று - 2 தெற்கிலிருந்து வீசும் காற்று இதமான இயல்பு உடையது
அ) கூற்று 1,2 தவறு ஆ) கூற்று 1,2 சரி
இ) கூற்று 1 சரி, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி

4. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே
அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய
இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

II. பொருத்துக 4 x ½ = 2

5. அ) குரல் - 1. மூங்கில் 4
6. ஆ) தாள் - 2. இளம்பாக்கு 3
7. இ) நுழாய் - 3. நெற்கதிர் 1
8. ஈ) குருத்து - 4. புளியன்வித்து 2

III. சுருக்கமான விடையளி 4 x 1 = 4

9. ஆழியில் சங்கங்கள் வாழும் - கோடிட்ட சொற்களுக்குப் பதிலாகப் புதிய சொற்களை மாற்றி எழுதுக.

10. ஒன்பான்சுவை - எண்ணுப்பெயர் எழுதி, தமிழ் எண் எழுதுக.

11. படகு - புதிர் எழுதுக

12. உலகின் மிகச் சிறிய தவளை என்ற நூலை எழுதியர் .................

IV. எவையேனும் ஐந்தனுக்குச் சுருக்கமாக விடையளி 5 x 2 = 10

13. மன்னும் சிலம்பே! மணிமே கலை வடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழத்துவமே! - இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர, எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

14. விரிச்சி கேட்டல் என்றால் என்ன?

15. மக்களின் மதிநுட்பமும் பண்பாடும் யாது?

16. வசன கவிதை - குறிப்பு வரைக.

17. விகுதி பெற்ற தொழிற்பெயர்களை அட்டவணைப்படுத்துக.
18. மாஅல் - பொருளும் இலக்கணமும் தருக. — திருமால் - செய்யுளிசை அளபெடை
19. ஆர்கலி - பொருள் எழுதி தொடரில் அமைக்க

**V. எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமாக விடையளி.** 2 x 4 = 8

20. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழிதல் பாங்கினை விளக்குக.
21. கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் - குறிப்பு வரைக
22. யானைப்பாகன் - இதன் தொகைநிலைத் தொடர் வகையை விளக்குக.

**VI. ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி** 1 x 5 = 5

23. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விரித்து எழுதுக.
24. தமிழ்ச்சொல்வளம் பாடத்திலிருந்து பயிர்வகைச் சொற்கள் இரண்டினை எழுதுக.

**VII. உரைப்பத்தியைப் படித்து விடையளி** 2 x 1 = 2

25. இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும் பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும் மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒரு வகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

1. பாதிரிப் பூ எதற்குத் தன் மணத்தை ஏற்றும்?
2. மூங்கில் அரிசி எவ்வாறு உருவாகிறது?

**VIII. பாநயம் எழுதுக. (எதுகை, மோனை, இயைபு மட்டும்)** 3

26.
தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே

**IX. மொழி பெயர்க்க** 2

27. Language is the road map of culture . It tells you where its people come from and where they are going.

**X. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி** 5

28. இலைகளின் சலசலப்பு - பறவைகளின் சிறகடிப்பு - அழகான ஆறு - உருண்ட கூழாங்கற்கள் இயற்கையின் கண்காட்சி - இக்குறிப்பைக் கொண்டு நிகழ்வு அல்லது கதையை எழுதுக.
29. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?
30. மரம் இயற்கையின் வரம் என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. 5

**XI. அடிமாறாமல் எழுதுக**

31. சிறுதாம்பு எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடலை அடிமாறாமல் எழுதுக.